Register Number

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. நாடகத்தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் பரிதிமாற் கலைஞர் கூறுவன யாவை ?

2. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க உரைப்பன யாவை ?

3. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்துவரும் பெருங்கொலை என்று திரு.வி.க வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

4. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வேர்ட்ஸ் வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை ?

5. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்கள் குறித்து இளவழகனார் கருத்தை எழுதுக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** (ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது) விடை தருக : $3 \times 4 = 12$

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

7. உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர், நயமுண்டாகக் குறளமைத்திருப்பதை விளக்குக.

8. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை ?

9. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

10. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** (இருபது வரிகளின் மிகாது) விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. தமிழ் - உயர்தனிச் செம்மொழி — இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனை டாக்டர். அ. சிதம்பரநாதன் எவ்வாறு சான்றுகளுடன் விளக்குகிறார் ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களின் மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'கிழிசல்'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'சட்டை'* அல்லது *'பால் வண்ணம் பிள்ளை'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக வரைக.

14. *'ஒவ்வொரு கல்லாய்'* அல்லது *'மண்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

புகுந்த இடத்தில் மாமியார் கொடுமை - கட்டியவனோ கைவிரித்தான் - பிறந்த இடத்தில் திருமணமாகாத மூன்று பெண்களை வைத்துத் துன்பப்படும் பெற்றோரின் ஆதரவும் இல்லை - என்ன செய்வது என்று தெரியாமல் வீதிக்கு கைக்குழந்தையுடன் வந்து விட்ட பெண் ஒருத்தி, எதிர் நீச்சல் போட்டு வாழ்க்கையில் உயர்ந்ததாகக் கற்பனையாக ஒரு கதை எழுதுக.

*அல்லது*

சாலையோரம் பிச்சையெடுத்தக் குழந்தையை எடுத்து வளர்த்து, வாழ்க்கையில் உயரவைத்து சாதனை படைத்ததாக ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுள்களைப் படித்துணர்ந்து, அவற்றில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக : $1 \times 10 = 10$

முழுமைநிலா அழகுநிலா
முளைத்தது விண்மேலே - அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போல்
அழுதமுகம் சிரித்தது போல்
அல்லி விரிந்தாற்போல் - மேல்
கழற்றியெறிந்த வெள்ளித் தட்டு
தொத்திக் கிடந்தாற் போல்
குருட்டு விழியும் திறந்தது போல்
இருட்டில் வான விளக்கு - நம்
பொருட்டு வந்தது பாடியாடிப்
பொழுது போக்கத் துவங்கு
மரத்தின் அடியில் நிலவு வெளிச்சம்
மயிலின் தோகைவிழிகள் - பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் விழிகள்.

– பாரதிதாசன்.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. $3 \times 2 = 6$

16. Time and tide wait for none.

17. A penny saved a penny gained.

18. Kindness cannot be bought.

19. Keep off the grass.

20. Where there is will ; there is way.

21. Indian people always dislike violence.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து ( பத்து வரிகளில் ) எழுதுக. $1 \times 4 = 4$

அ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

ஆ) தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை.

இ) தன் கையே தனக்குதவி.

அல்லது

'*வானவில்*' அல்லது '*தாயன்பு*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை ( பத்து வரிகளுக்குள் ) எழுதுக.

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : 10 × 1 = 10

23. ஒன்றோ அல்லது இரண்டோ தருக.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக )

25. வாழ்கத் தமிழ் என்று அவளைச் சொன்னான். அறிந்துச் சொல் எனக்கு

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. இந்த செஞ்சுரி 'டென்ஷன்' நிறைந்தது.

( பிறமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக ).

27. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்.

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக ).

28. ஆற்றில் வெல்லம் வந்தது வீட்டில் வெள்ளம் இருக்கிறது.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக ).

29. தினை - திணை அல்லது ஒலி - ஒளி

( பொருள் வேறுபாட்டை அறியும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

30. கோளி முட்டை தாவாரத்தில் உருண்டது.

( கொச்சையான வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக ).

31. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.

( பிறமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக ).

32. ஒழுக்கமுடைமை குடிமை என்பது திருவள்ளுவர் வகுத்த வரையறையாகும்.

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக ).